

தினமணி 27-10-78

இலங்கை ஜனாதிபதி சென்னை வந்தார்!

எம். ஜி. ஆர். வரவேற்பு!!

ஜெயவர்த்தனா

சென்னை, அக். 27—
இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா சென்னை வந்தார். அவரை விமான நிலையத்தில் எம். ஜி. ஆர். வரவேற்றார்.

இலங்கை ஜனாதிபதி

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று மாலை விசேஷ விமானம் மூலம் இலங்கையில் இருந்து சென்னை வந்தார். அவருடன் அவரது மனைவியும் வந்தார்.

எம். ஜி. ஆர். வரவேற்பு

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருவரையும் தமிழ்நாடு முதன் மந்திரி எம். ஜி. ராமச்சந்திரன் மற்றும் மந்திரிகள் மனோகரன், பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமை செயலாளர் கார்த்திகேயன், இலங்கையில் உள்ள இந்திய தூதர் தாமஸ் ஆபிரகாம், இலங்கை தூதர் கவுதமதாசா, ஆகியோர் வரவேற்றனர்.

இன்று டெல்லி பயணம்

ஜெயவர்த்தனா நேற்று இரவு சென்னையில் கவர்னர் மாளிகையில் தங்கினார். இன்று (வெள்ளிக்கிழமை) காலை அவர் டெல்லி புறப்பட்டுச் செல்வார். இந்தியாவில் 15 நாட்கள் சுற்றுப் பயணம் செய்வார். ஜனாதிபதியானதும் அவர் இந்தியாவுக்கு வந்திருப்பது இதுவே முதல் தடவை.

எதிர்ப்பு சுவரொட்டி!

"ஈழத்தமிழர்களை நசுக்கும் ஜெயவர்த்தனாவே திரும்பிப்போ" என்று வாசகம் எழுதப்பட்ட சுவரொட்டிகள் நேற்று சென்னை நகரில் ஒட்டப்பட்டு இருந்தன.

ஈழத்தமிழர் வி[illegible] திரும்பிப்போ

சென்னை விமான நிலையத்தில் இலங்கை ஜனாதிபதிக்கு எதிர்ப்பு!

சேலம் பாவரசு கைது!

அலை ஓசை 27-10-78

சென்னை, அக். 26—
ஈழத்தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் இனஒதுக்கல் எதிர்ப்பு இயக்கத்தினர் இன்று சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து துண்டு நோட்டீஸ் வீசினர்.

ஜெயவர்த்தனா இன்று மாலை சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய போதே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

எதிர்ப்புக் குரல் எழுப்பி துண்டு நோட்டீஸ் வினியோகித்தபோது இன ஒதுக்கல் எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த சேலம் பாவரசு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

கிடைக்கப்பெற்ற
ாலைபேசிச் செய்
தருவிக்கப்பட்ட
ருபரிடம் சேன
நான்ன வாசகம்
ழ்த் தலைவர்
ாடமாக அமைய
''சிங்கத்தைத்
நம்பிடுவதை நீ
ாரகிருய்'' என்

'பிரதமர்கள்''
ல் வெளிவந்த
ில்' இதனை மேற்
'துலாம்பரமாக'.
ள்ளார்.
ராளுமன்ற உறுப்.
பாராளுமன்
மேடையாகவும்,
உபயோகிப்
சென்றவர்
இடம்பெறுவன
ல் இருக்கும்.
ன்றே பரப்பப்
ரய்களால் உள்
பதிவில் இருந்து
யாராலும் இய
அழைப்பு வந்தாலும்
ளுமன்றச் சபைக்கு
ல்எந்தப்பெரிய பேர்
களையும் இவர்கள் சந்திக்காமல் இருப்பதே பாதுகாப்பானது.' அழைப்பார்கள்; சென்றதும் புறக்கதவு வழியாகத்தம்மை அனுகியதாகப் பத்திரிகைகளில் அநாமதேயச் செய்திகளாகப் பிரஸ்தாபிப்பார்கள்.

—திரவியம்

MADRAS

பர்மாவில் ஈழ மாணவர் பொதுமன்றம் ஆரம்பம்

ஆகஸ்ட் 1977ல் லண்டனில் நடைபெற்ற முதலாவது மாணவ மகாநாடு 'ஈழ மாணவர் பொது மன்றத்தை'' தோற்றுவித்தது. ஈழ மாணவர் பொது மன்றம் இங்கிலாந்தில் உள்ள சகல கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் உள்ள மாணவர்களை ஒன்றுதிரட்டியுள்ளது. தற்போது கனடாவில் டொரோண்டோ, கங்கரி, எட்மண்டன்போன்ற நகரங்களிலும் ஜெர்மனியில் ஹம்பேர்க், பிராங்பேர்ட் போன்ற நகரங்களிலும் ஈழ மாணவர் பொது மன்றம் வளர்ச்சியுற்று வருகிறது.

அண்மையில் பர்மாவில் நிறுவப்பட்ட ஈழ மாணவர் பொது மன்றம் பர்மா கிளை குறித்து அதன் செயலாளர் மா. நடராசன் பின்வரும் செய்தியைத் தந்துள்ளார்.

''கடந்த 27-8-78ம் நாள் காலை 9 மணிக்கு, கிழக்கு இரங்கூனில் அமைந்துள்ள ''அன்னை மாரியம்மன் ஆலய மண்டபத்தில்'' ஈழமாணவர் பொதுமன்றம் தலைமை நிலையப் (லண்டன்) பிரதிநிதி திருமிகு. மா. மதியழகன் அவர்கள் தலைமையில், சில பேராசிரியர்கள் முன்னிலையில்; பாரெங்கும் பரந்து கிடக்கும் ஈழத்தமிழர்களின் எதிர்கால நலங்குறித்து ஈழ மாணவர் பொது மன்றம் பர்மா கிளை நிறுவனம் அமைக்கப்பட்டது.

பல மாவட்டங்களிலிருந்து இக்கூட்டத்திற்கு வருகை தந்த அகில பர்மா தமிழ்ப் பேசும் மாணவர்களின் முடிவிற்கிணங்க கீழ்காணும் 'செயற்குழு' அமைக்கப்பட்டது.

தலைவர்; திரு. அ. கரிகாலன்; துணைத்தலைவர்: திரு. டி. சோசப்; செயலாளர்: திரு. மா. நடராசன், துணைச் செயலாளர்: திரு. ஆர். கே. முத்து, இணைச் செயலாளர்: திரு. மு. மனோகரன், பொருளாளர்: திரு. பா. மீ. இராமச்சந்திரன் கணக்குத் தணிக்கையாளர்: திரு. எம். என். கலைச்செல்வன்.

இம்மன்றத்திற்கு 51 நபர்கள் கொண்ட பொதுக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.''

தலைமைப்பணியக
த. வி. கூட்டணி

கருத்தரங்கு

காலம்: 14-10-78 சனி மாலை 6-30 மணி.

தலைப்பு: ''தேசிய இன விடுதலை இயக்கமும் அமைப்பும்''

பேசுபவர்: திரு. வி. என். நவரத்தினம் பா. உ.

'அமரர் இராசமாணிக்கம்' பேசுபவர்: கோவை மகேசன்.